ஆனால் கொலின்ஸ் அம்முறை ஊருக்கு வந்தபோது அவனுக்கு தனது சாவு.. அதன் திகதி கூடத் தெரிந்திருந்தது. வந்தவன் தான் படித்த பாடசாலை, பழகிய இடங்கள் எங்கும் சென்றான். கூடித்திரிந்த நண்பர்களுடன் பாசத்தோடு கதைத்தான்.

அவனோடு படித்து கூடித்திரிந்த நண்பன் இவனைப்பற்றிச் சொல்லும்போது - "அண்ணை நாங்கள் ஒரு நாள் பொழுதுபடுகிற நேரம் சந்தி மதவடியில கதைச்சுக் கொண்டு நிண்டனாங்கள். அப்ப கொலின்ஸ் எங்களைக் கண்டிட்டு வந்து மதவடியில இருந்து எங்களோட கதைச்சுக் கொண்டிருந்தான். "நாட்டுக்காகச் சாக ஒருக்காலும் பயப்படக்கூடாது" "என்ற கொலின்சின் வார்த்தை இப்பத்தான் எனக்கு விளங்குது" என்றான்.

இந்த 21 வயது இளைஞன் - கரும்புலி கொலின்ஸ்- தன் சாவினால் இனத்திற்குச் சாதித்தது என்ன என்பதை சரியாக உணர வேண்டின் அவன் தன்னைத் தானே தற்கொடையாக்கிய 10.07.1990 க்கு சற்று முன்னைய நாட்களை எண்ணிப் பார்க்க வேண்டும்.

அங்கு வடமராட்சியைச் சார்ந்த பகுதியில் தன்கூரிய பார்வையைச் செலுத்தியபடி எதிரியின் பாரிய கப்பல் ஒன்று நிலைகொண்டு நிற்கிறது. அதன் ஆதிக்கக் கண்ணோட்டம் எங்கும் செல்லும். அது கடற்படைப் படகுகளுக்கு வேவு பார்க்கும். தகவல் கொடுக்கும். 'எமது படகுகளை, படகோட்டிகளை, ஊர்மனைகளை அழிக்கவும் அடக்கவும் அது உதவிகள் செய்யும். இதை அகற்ற வேண்டியிருந்தது. இந்த உறுதிப்பாட்டுடன் மீண்டும் வடபகுதிக் கடற்கரைக்கு வருவோம்.

அங்கு -

"பொடியள் கரும்புலியாகிக் கப்பலை அடிக்கப் போறாங்களாம்" என கதை பரவுகிறது.

கரையில் வரிப்புலிச் சீருடைகளுக்கு நடுவில் கரியநிற சீருடை தரித்த மூவர். அச்சீருடையுடன் நின்றவர்களில் கொலின்ஸ் ஒருவன். கடலலை இந்த மூன்று கரும்புலிகளின் பாதங்களைத் தொட்டுச் செல்கின்றன.

அக் கரிய இருளில் கையசைத்து கூடியிருந்தவர்களிடமிருந்து விடை பெறுவது தெரிகிறது.

படகு புறப்பட்டு... பின் மறைகிறது.

கண்கள் கடலை ஊடுருவுகின்றன.

சிறிது நேரத்தில் கடலில் பெரிய ஒளிப் பிளம்பு. அதோடு அதிரும் வெடி ஒலி.

அந்த உப்புக் காற்று அவர்களை அணைத்துக் கொண்டது.

**கரும்புலி லெப் கேணல் போர்க் வெடிமருந்து நிரப்பிய வண்டியுடன்**



# "நாட்டுக்காக சாக ஒருக்காலும் பயப்படக் கூடாது"



- கடற் கரும்புலி கப்டன் கொலின்ஸ்

அவன் பிறந்து வளர்ந்தது மன்னார் மாவட்டத்தின் "நறுவிலிக்குளம்" என்னும் கிராமத்தில். இவனது பெற்றோர் ஏதிலிகளாய் இருப்பது, இதற்கு அப்பாலுள்ள பண்டிவிரிச்சான் கிரா மத்தில். ஆனால் இவன் எங்கே?

இவர்களுக்கே தெரியும், இவன் கரும்புலியாகி வீரம் விளைந்த வடகடலின் நீரிலும், காற்றிலும் இன்று கலந்து வாழ்கிறான் என்பது. எனவேதான் இவனது தாய் தன் துயரைத் துடைக்க பேரக் குழந்தைக்கு (மூத்த மகளின் மகனுக்கு) 'கொலின்ஸ்' என்று பெயரிட்டு அழைக்கிறாள். அந்த அழியாத பெயர் இவர்களுக்கு ஓர் ஆறுதலையும், துணிவின் உறுதிப்பாட்டையும் தந்து நிற்பதை அந்த வீட்டாருடன் உரையாடக்கிடைத்தபோது உணர முடிந்தது.

அந்தச் சூழலில் அவனது வயோதிபத் தந்தை கூறினார்.

"இவன் தம்பி, வலு கெட்டிக்காரன். நல்லாப் படிப்பான். அவன் படிச்சுக் கொண்டிருக்கேக்க எங்க ஊரிலையும் சிங்கள ஆமிக்காரங்க சுத்தி வளைச்சு கனபேரை பிடிச்சுக் கொண்டு போனாங்கள்.

அதனால் நாங்கள் பல இடங்களுக்கு இடம் பெயர்ந்தம். இது இவனுக்கு சரியான கவலை. அவன் தம்பி, "ஆமியின்ரை கையில பிடிபட்டுச் சாவதைவிட ஒரு ஆமிக்காரனைத்தானும் சுட்டுட்டுச் சாகலாம்" என்று சொல்லுவான்."

"இவன் வெளிநாடு செல்ல விரும்ப இல்லை. சொன்னபடி இயக்கத்தில்தான் சேர்ந்தான்" - இது அங்கிருந்த தாயாரின் வார்த்தை. இதைத் தொடர்ந்து மீண்டும் அந்தத் தந்தையார் கூறத்தொடங்கினார்.

"தம்பி இவன் லீவு முடிஞ்சு போறதுக்கு முதல் நாள் தாயைப் பார்த்து, "அம்மா, நான் இயக்க வேலையா ஒரு இடத்துக்குப் போக இருக்கிறன். இது முக்கியமான வேலை. இந்த வேலையின் உழைப்பு வீட்டுக்கு வராது - அது நாட்டுக்கு மட்டும்தான்" என்று சொன்னான் - நாங்கள் அதை அப்ப பெரிசா எடுக்கேல்லை."

